# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, சங்கங்கள் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, மே மாதம் 06 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

# 2005 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, சங்கங்கள் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டம்

[2005 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச. வ—ஓ. 101/2003
4485

## சங்கங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, சங்கங்கள் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** இதனகத்துப் பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *123 ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் "தொகை கொழும்பிலுள்ள" என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவு வரையிலான எல்லா சொற்களுக்கும் பதிலாக, "தொகை, மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்கில் அறவிடப்படலாம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து இலட்சம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்து இலட்சம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில் "இருபத்தியொரு வயதிற்குக் குறைந்த ஆனால் பதினாறு வயதிற்கு மேற்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினெட்டு வயதிற்குக் குறைந்த ஆனால் பதினாறு வயதிற்கு மேற்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

2 –P.L. 000069 – 1,250 (2005/02)

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 17 ஆம் பிரிவை திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது அப்பிரிவில், "மிகையூதியம் அல்லது உறுதிப்பாடுகள் மீது வெளிப்படுத்தப்பட்ட அத்தொகையை விஞ்சாத சேர்ப்புக்கள் என்பவற்றுடன் மொத்த பணத்தொகை வகையாக இரண்டாயிரம் ரூபாவுக்கு மேற்பட்டதை அல்லது ஆண்டொன்றுக்கு ஐநூறு ரூபாவுக்கு மேற்பட்டதை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மிகையூதியம் அல்லது உறுதிப்பாடுகள் மீது வெளிப்படுத்தப்பட்ட அத்தொகையை விஞ்சாத சேர்ப்புக்கள் என்பனவற்றுடன் மொத்தப் பணத்தொகை வகையாக இருபத்தைந்தாயிரம் ரூபாவுக்கு மேற்பட்டதை அல்லது ஆண்டொன்றுக்கு ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்பட்டதை" என்னும் சொற்களை இடுவ தன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*